සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

**மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை - 2016 (2017)**

First Efficiency Bar Examination for Women Development Officers of the Ministry of Women and Child Affairs - 2016 (2017)

**(01) நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் அலுவலக நடைமுறைகள்**
Financial Regulations and Office Systems

**இரண்டு மணித்தியாலங்கள்**
Two hours

ஒரு பகுதியில் இருந்து குறைந்த பட்சம் **இரு** வினாக்களையாவது தெரிவு செய்து மொத்தமாக **ஐந்து** வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக. ஒவ்வொரு வினாவிற்கும் **சமனாகப்** புள்ளிகள் வழங்கப்படும்.

## பகுதி I - நிதி ஒழுங்குவிதிகள்

**1.** (i) "ஆணைச்சீட்டு" என்பது என்னவென்பதைச் சுருக்கமாக விளக்குக.

(ii) ஆணைச்சீட்டு வகைகள் **ஐந்தைப்** பெயரிடுக.

**2.** (i) நி.பி.102 இற்கேற்ப நட்டங்கள் / சேதங்கள் என்பதில் உள்ளடங்கும் நட்டங்கள் **ஐந்தைக்** குறிப்பிடுக.

(ii) ஒவ்வொரு திணைக்களத்தினாலும் நட்டங்கள் தொடர்பாக அறிக்கையிடுவதற்காக நட்ட ஏடு ஒன்று பேணப்பட்டு வரவேண்டும். அவ்வகையான நட்ட ஏட்டில் உள்ளடக்கப்படவேண்டிய **பத்து** விடயங்களைக் குறிப்பிடுக.

**3.** உறுதிப்படுத்தப்பட்ட வவுச்சருக்காக கொடுப்பனவு செய்வதற்கான அதிகாரத்தைக் கொண்டுள்ள அலுவலரினால் தமது கணக்கீட்டு அலுவலருக்கு பொறுப்புக்கூற வேண்டிய விடயங்களைக் குறிப்பிடுக.

## பகுதி II - அலுவலக நடைமுறைகள்

**4.** (i) அரசாங்க உத்தியோகத்தரொருவரின் தமது வழமையான தொழிலுக்கு அல்லது பதவிக்கு புறம்பான சேவைகள் ஆற்றுதல் தொடர்பான நியதிகளைச் சுருக்கமாக விளக்குக.

(ii) அரசியல் உரிமைகளை அனுபவிக்க உரித்துடைய உத்தியோகத்தரொருவருக்கான இடமாற்றம் தொடர்பான சலுகைகள் யாவை?

**5.** (i) பதவி நிலையில் அரச அலுவலர் ஒருவருக்கு எதிராகத் தொடுக்கப்பட்டுள்ள வழக்கொன்றிலே எதிர் வாதத்தினை மேற்கொள்ளல் தொடர்பாக அறிந்திருக்கவேண்டிய விடயங்கள் எவை?

(ii) அரச சேவையிலே ஓய்வைப் பெறும் அரச அலுவலர் ஒருவருக்கு ஓய்வுக்கு முன்னரான லீவைப் பெற்றுக் கொடுக்கும் முறையை விளக்குக.

**6.** 'நேர்கோட்டு ஒழுங்கமைப்பு' என்பதனால் கருதப்படுவது என்னவென்பதைக் குறிப்பிட்டு இவ்வகையான ஒழுங்கமைப்பு முறைமையில் ஏற்படுகின்ற நன்மைகளை விளக்குக.

* * *

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

**மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை - 2016 (2017)**

First Efficiency Bar Examination for Women Development Officers of the Ministry of Women and Child Affairs - 2016 (2017)

**(02) பால் நிலையும் பெண்ணுரிமைகளும்**
Gender Socialization and Women's rights

இரண்டு மணித்தியாலங்கள்
Two hours

**ஐந்து** வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக. எல்லா வினாக்களுக்கும் சமமாகப் புள்ளிகள் வழங்கப்படும்.

1. பெண்கள் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக நிறுவப்பட்ட இலங்கை மகளிர் பிரகடனத்தினால் வழங்கப்படும் பங்களிப்பை பரிசீலிக்குக.

2. இலங்கை சமூகத்திலே ஆண் பெண் சமூகத்தன்மையுடன் இணைந்த பண்புகளை, வலயத்தின் ஏனைய நாடுகளின் பண்புகளுடன் ஒப்பிட்டு அவற்றில் உள்ள ஒத்த தன்மை வேறுபாட்டுத்தன்மை என்பன பற்றிப் பரிசீலிக்குக.

3. "பெண்களைத் துன்புறுத்தல் பெண்களுக்கு எதிரான பாகுபாடு என்பவற்றை சட்ட ரீதியான தீர்வினால் மட்டும் ஒழித்துவிட இயலாது"
இக்கூற்று தொடர்பாக உங்களது கருத்துக்களை காரணம் காட்டி விளக்குக.

4. "கடந்த நூற்றாண்டினுள் இலங்கை குடும்பங்கள் நவீனமயப்படுத்தப்பட்டிருப்பினும் பெண்களின் பங்களிப்பும் அவர்கள் மீது கொண்ட மனப்பாங்கும் இன்னமும் மரபுவழிப்பட்டதாகவே விளங்குகின்றன."
இக் கூற்று பற்றிய உமது கருத்துகள் சார்பாக நவீன குடும்ப கட்டமைப்பு முகங் கொடுக்கும் பிரச்சினைகளைக் கலந்துரையாடுக.

5. பெண்கள் ஊழியக் கொள்ளளவானது நாட்டினது பொருளாதார செயன்முறைகளுக்கு ஏற்படுத்தும் பங்களிப்புப் பற்றி விமர்சிக்குக.

6. பிள்ளைப்பராயத்தை இழந்த தாய்மார்களும் அவர்களின் பிள்ளைகளும் முகங்கொடுக்கும் பிரச்சனைகள் எவ்வாறான தன்மையானவை எனப் பரிசீலிக்குக.

* * *

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான
முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை - 2016 (2017)
First Efficiency Bar Examination for Women Development Officers of the
Ministry of Women and Child Affairs - 2016 (2017)

(03) சமூக விஞ்ஞானமும் உள வளத் துணையும்
Sociology and psychological counselling

இரண்டு மணித்தியாலங்கள்
Two hours

ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.

1. (i) இலங்கைச் சமூகமானது விரைவான மாற்றத்திற்கு உள்ளாகி வருகின்றது. உளவியல் பிரச்சினைகள் ஏற்படக் காரணமான இங்குள்ள எதிர்மறையான சமூக, கலாசார மாற்ற இயல்புகள் ஐந்தை உதாரணங்கள் தந்து விவரிக்குக. *(10 புள்ளிகள்)*
   (ii) நாகரிகமயமாதல், கைத்தொழில்மயமாதல், பொறிமுறைமயமாதல், மேலைத்தேயமயமாதல் ஆகிய ஒன்றுக்கொன்று தொடர்பான எண்ணக்கருவினை சுருக்கமாக வரைவிலக்கணப்படுத்தி இலங்கையிலே தற்போதைய நாகரிக மயமாதலில் இந்த பண்பகளுக்கான உதாரணங்கள் தருக. *(10 புள்ளிகள்)*

2. (i) "குடும்பம் என்பது சமூகத்தில் மிகவும் முக்கியமான சமூக கூட்டமைப்பாகும்."
   குடும்பத்தின் கடமைகள் பற்றிக் கவனம் செலுத்தி இக் கருத்தை விளக்குக. *(10 புள்ளிகள்)*
   (ii) "தற்போது அதிகளவிலான சமூகம் தொடர்பான பிரச்சினைகளுக்கு சமூகமயமாதல் செயன்முறையின் குறைபாடுகளே காரணமாக அமைகின்றன."
   சமூகமயமாதல் என்றால் என்ன என்பதை வரைவிலக்கணப்படுத்தி இந்தக் கருத்தினை நீங்கள் ஏற்றுக்கொள்கின்றீர்களா என்பதற்கு காரணங்களைக் குறிப்பிடுக. *(10 புள்ளிகள்)*

3. (i) "கலாசாரமொன்றினை அதன் மீதான பண்புகளின் மூலம் அறிந்து கொள்ளமுடியும்."
   கலாசாரத்தின் மீதான பண்புகள் பத்தின் பெயர் குறிப்பிட்டு இது தொடர்பான விடயங்களைக் குறிப்பிடுக. *(10 புள்ளிகள்)*
   (ii) நம்பிக்கை, ஒழுக்கவியல் (பெறுமானம்) மற்றும் மனப்பாங்கு என்பனவற்றை வரைவிலக்கணப்படுத்தி கலாசாரத்திற்கும் அவற்றிற்குமுள்ள தொடர்பினை விளக்குக. *(10 புள்ளிகள்)*

4. (i) "நபர்களினது தற்போதைய ஆளுமையானது முன்னைய ஆளுமை அபிவிருத்தி செயன்முறையின் பெறுபேறாகும்."
   இந்தக் கூற்றினை தர்க்க ரீதியான முறையில் விளக்குக. *(10 புள்ளிகள்)*
   (ii) "தற்போது அதிகளவிலான உளவியல் பிரச்சினைகளுக்கு குறைபாடுள்ள ஆளுமை அபிவிருத்தி காரணமாக அமைகிறது."
   இந்தக் கருத்திற்கு நீங்கள் உடன்படுகின்றீரா? உங்கள் விடைக்கு காரணங்களைக் குறிப்பிடுக. *(10 புள்ளிகள்)*

5. (i) "ஆலோசனைச் செயன்முறைகள் ஆளுமை அபிவிருத்தி செயன்முறையாகும்."
   ஆலோசனை என்பதனை வரைவிலக்கணப்படுத்தி இந்தக் கருத்தை விளக்குக. *(10 புள்ளிகள்)*
   (ii) சமூகப் புலக்காட்சி என்றால் என்னவென்பதை விவரித்து அது உளவியல் ரீதியான பிரச்சனைகள் ஏற்படுத்துவதற்கு தாக்கத்தை செலுத்தும் விதத்தை புலக்காட்சிக் குறைபாட்டை அடிப்படையாகக் கொண்டு சுருக்கமாக விளக்குக. *(10 புள்ளிகள்)*

6. (i) பெண்கள் துன்புறுத்தப்படுதல் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம் (child abuse) என்றால் என்னவென்பதைச் சுருக்கமாக விளக்குக. *(10 புள்ளிகள்)*
   (ii) பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் ஏற்படுகின்ற பிரச்சினைகள், தொல்லைகள் என்பன நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக பத்திரிகை செய்திகள் எடுத்துக் காட்டுகின்றன. அவ்வாறான தொல்லைகள் ஐந்தைக் குறிப்பிட்டு அதில் தாக்கத்தை ஏற்படுத்தும் குடும்பங்கள் மற்றும் சமூகச் சூழல்சார் காரணிகள் ஐந்தைச் சுருக்கமாக விளக்குக. *(10 புள்ளிகள்)*

7. (i) "பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான துன்புறுத்தல்கள் அதிகரிப்பதற்கு ஊடகங்கள் மூலம் அவற்றிக்கு வழங்கப்படும் பிரசாரங்களே காரணமாகின்றது என்பது ஒரு சிலரினது கருத்தாகும்."
   இதனை நீங்கள் ஏற்றுக் கொள்கின்றீரா என்பதைக் காரணங்கள் காட்டி விளக்குக. *(10 புள்ளிகள்)*
   (ii) சிறுவர்கள் மற்றும் பெண்களுக்கு எதிரான துன்புறுத்தல்கள் ஆலோசனைச் செயன்முறை தொடர்பாக தற்போது காணக்கூடிய பின்னடைவுகள் ஐந்தைப் பெயரிட்டு அதற்கான செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கு மேற்கொள்ளக்கூடிய வழிமுறைகளை முன்மொழிக. *(10 புள்ளிகள்)*

* * *